# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் வ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூரு] யாழ்ப்பாணம்:- நந்தன ஆடு வைகாசி மீ கசஉ செவ்வாய்க்கிழமை (27 May 1952) [இல - கச]

திருத்தொண்டர் திருநாள்

## நீராலே திருவிளக்கு ஏற்றிய அன்பர்

### நன்மை பெருகும் நமி நந்தி அடிகள்

சோழ மண்டலத்திலே ஏமப் பேறூரிலே பிராமணகுலத்திலே யுதித்த நமிநந்தியடிகளாயனார் என்பவர் சிவபெருமானுடைய திருவடிகளை இரவும் பகலும் ஒழியாது அன்போடு வழிபடுதலிலே பெரும் இன்பம் பெற்றார். அவர் தமது வாழ்க்கையின் ஊதியமாவது சிவபெருமானுடைய திருவடிகளை வழிபடுதலே என்னும எண்ணமுடையாராய்ப் பலநாள் திருவாரூருக்குப் போய் வன்மீகநாதரை வணங்கினர்.

வாய்மை மறைநூல் சீலத்தால்
வளர்க்குஞ் செந்தீ எனத்
தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவே
மெய்ப் பொருளென் றறியுந்
துணிவினர்
சாம கண்டர் செய்யகழல்
வழிபட் டொழுகுந்
தலைமை நிலை
யாம இரவும் பகலும்உணர்
வொழியா இன்பம் எய்தினர்.
அவ்வூர் நின்றுந் திருவாரூ
ரதனை அடைவார்
"அடியார்மேல்,
வெவ்வூறகற்றும் பெருமான்றன்
விரைசூழ் மலர்த்தாள்
பணிவுறுதல்,
எவ்வூ தியமும் எனக்
கொள்ளும் எண்ணம்
உடையார் பலநாளும்
தெவ்வூர் எரித்த வரைச்
சிலையார் திருப்பா தங்கள்
வணங்கினர்.

#### விளக்கேற்றிய அற்புதம்

ஒருநாள் பக்கத்திலிருக்கின்ற அரநெறி என்னும் ஆலயத்தில் சுவாமியை வணங்கி இரவில் தீபமேற்ற விரும்பினர். மாலைக்காலமாகி வெளியே செல்ல எலாமையால் அணிமையிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்று சிவாலயத்தில் விளக்கேற்ற நெய் கேட்டார். அவ்வீட்டார் சமணர்களானமையால், கையிலே அக்கினியை வைத்திருக்கும் அவருக்கு விளக்குமிகையாகும். வேண்டுமானால் நீரை முகந்து எரியும் என்றார்கள். நாயனார் மிகுந்த துன்பத்துடன் திரும்பிப் போய்த் திருக்கோயிலின் முன் வீழ்ந்து வணங்க, சிவபெருமானது திருவருளாலே, துன்பத்தை நீக்கிப் பக்கத்திலே யிருக்கின்ற குளத்தில் நீர்முகந்து விளக்கேற்றுமாறு ஒரு அசரீரி ஆகாயத்தில் எழுந்தது. நாயனார் மனம் மகிழ்ந்து குளத்தில் இறங்கிச் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு நீரை முகந்து விளக்கேற்றினர். அது சுடர்விட்டெழுந்தது. அதி கண்டு சமணர் காணுமாறு களிகூர்ந்து நாடறியக் கோயில் முழுதும் நல் விளக்கேற்றினர்,

சென்னி மிசைநீர் தரித்த
பிரான் அருளை சிந்தை
செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு
நாதர் நாமம் நவின்
றேத்தி
அந்நீர் முகந்து கொண்டேறி
அப்பர் கோயில்
அடைந்(து) அகலின்

முந்நீர் உலகம் அதிசயிப்ப
முறுக்குந் திரிமேல்
நீர் வார்த்தார்.
சோதி விளக்கொன் றேற்றுதலுஞ்
சுடர்விட் டெழுந்த(து)
அது நோக்கி
ஆதி முதல்வர் அரநெறியார்
கோயில் அடைய
விளக்கேற்றி
ஏதம் நினைந்த அருகந்தர்
எதிரே முதிருங்
களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு
நீரால் எரித்தார்
நாடறிய.

இதன்பின் இப்படியே நாள் தோறுஞ்செய்தார். வன்மீக நாதருக்கு வேண்டியன வேதாகம விதிப்படி நமிநந்தியடிகள் அதிகாரியாயமர்ந்து செய்யுமாறு சோழ

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

உ

### தேனுமின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்

திருச்சிற்றம்பலம்

நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாருயிர் வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

திருச்சிற்றம்பலம்

---

### தேர்தலுக்காகும் திருக்குறள் 8.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு

**தேர்தற் புத்துரை:**

முட்டையிலிருந்து பறவை பறந்துபோக முட்டைக் கோதும் பறவைக் குஞ்சும் பின்னர் ஒருபோதும் சந்திக்காத தன்மைஎன தேர்தல் முடிந்ததும் அபேட்சகர்களும் ஆதாவாளர்களும் பின் ஒருவரை ஒருவர் அறியார்போல நடந்துகொள்வர்.

---

### உலக சமாதானத்துக்கு உதவி

உலக விவகாரங்களில் இந்தியா ஓர் முக்யத்துவமாக இருக்கின்றது என்ற ஜெர்மனி தேசத்தில் உள்ள Dr ஹைசல்மாசாஜ் என்பர் கூறுகின்றார். இவர் மேலும் கூறுவதாவது: "நேருவின் இந்தியா மக்களின் முன்னேற்றத்திற்கும், சமாதானத்துக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்றது" எகிப்திய தேசமும் உலக விவகாரங்களில் இந்தியாவுக்குச் சமமாக ஈடுபட்டிருக்கிறது என்றும், இவை கலைத்தாம் இப்பொழுது ஜர்மனியில் சுற்றுப் பிரயாணத்தின் பொருட்டு வந்து தங்கியிருக்கும், "அல்மிசிற்" என்னும் பத்திரிகையின் பிரபான செனட்டர் மகாமௌட் என்பதர்மூலம் அறிந்து நேருவுக்கு ஓர் பெருந் தொகைப் பணம், அவரின் முயற்சியை விருத்தியடையச் செய்வதற்கு உதவியதாகவும் கூறுகின்றார்.

---

தேர்தல் வெற்றி விபரம்

## முதல் நாள் முடிவு

### மந்திரிகள் மூவர் இடம் பெற்றனர்

### ஐக்கியதேசியக் கட்சிக்குப் 11 வெற்றி

சனிக்கிழமை (24-5-52) இல் நடந்த தேர்தலிலே நவ சமசமாசக் கட்சி அபேட்சகர்கள் மூவரும் படு தோல்வி அடைந்தனர்.

தொழிற்கட்சித் தலைவனும் இழந்தார் இடத்தை. பண்டாரநாயகக்கட்சி 9 இடங்களில் நின்று போட்டியிட்டு 5 இடங்களிலே தோல்வியுற்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சி 11 இடங்களைக் கைப்பற்றி 12 இடங்களிற் றோல்வியுற்றனர்.

தமிழரசுக் கட்சி திருக்கோணமலையில் வெற்றி பெற்றது.

பொதுவுடைமைக் கட்சி மத்திய கொழும்புத் தொகுதியிற் பெருவாரி வாக்குகள் பெற்றுத் தெரியப் பெற்றது.

தெரியப்பட்டோர் விபரம்

டொடங்கஸ் லண்டை
சேர், ஜோண். கொத்தலாவல
ஐ. தே. க.

கொழும்பு தெற்கு
திரு. T. F. ஜெயவர்த்தன
ஐ. தே. க.

கற்குடா
திரு. V. நல்லையா
ஐ. தே. க

பொத்துவில்
திரு. M. M. இபுறுஹிம்
ஐ. தே. க.

கண்டி
திரு. E. L. சேனநாயக
ஐ. தே. க.

கலகெதர
திரு. T. B. பனபொக்க
ஐ. தே. க.

கோறளைப்பொத்தாறு
திரு. T. B. பொகொலியட்ட
ஐ. தே. க.

களுத்துறை
திரு. P. A. குரே
ஐ. தே. க.

புத்தளம்
திரு. H. S. இஸ்மெயில்
ஐ. தே. க.

கொழும்பு மத்தி
Dr C. M. கலீல்
ஐ. தே. க.

கடுகன்னவ
திரு. E. A. நுகவெல
ஐ. தே. க.

சுதந்திரக் கட்சி
பொலன்னறுவ
திரு. C. P. de. சில்வா

மாவனெல
திரு. C. R. வெலிக்கமன

மாத்தளை
திரு. V. T. நாணயக்கார

பொதுவுடைமைக் கட்சி
கொழும்பு மத்தி:
திரு. பீட்டர் கெனமன்

தமிழரசுக் கட்சி
திரிகோணமலை:
திரு. N. R. இராசவரோதயர்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

அரசியல் அலை

## தேர்தல் ஊர்வல ஆரவாரம்

### இரவல் மாலையால் வரவேற்பு

### மோட்டார் இரதம் கூட்டிவைக்கும் சனத்திரள்

ஊர்வலங்களிற் பலவகை. தேர்தல ஊர்வலம் ஓர் செயற்கை ஊர்வலம், பார்வைக்கழகு, பாவனையிற் சிறந்தது. காரியத்தில எப்படியென் றெவராலும் குறிப்பிடமுடியாது.

தேவையானவை — பூமாலைகள் ஒருசில, மாறிமாறிச் சூட்டவேண்டியதுதான். மோட்டார் இரதம் ஒருசில அடிக்கடி போகிறதும் சனத்தை வரவழைக்கிறதுமா யிருக்கவேண்டியதுதான். மேள வாத்தியம் சனத் திரளிலிருந்து மனத்திரளை அளவிட முடியாது. பூமாலையிலிருந்து ஆமாதரனென் றாக்கிக்க இயலாது.

அநுராதபுரத்திலே தேர்தற் கூட்டமென்றால். மொலகருவ, மதவாச்சி முதலிய தொகுதிகளிலிருந்து ஆள் கடமாட்டம் அநுராதபுரி வாக்காளர் சிலரும் புற நகரிலிருந்து வந்தவர்களும் பலருமானால் இப்பிரசாரத்தின் அற்குறி எவ்வாறிருக்கும்.

மணக்கோலத்துடன புதுத் தம்பதிகள் ஊர்வலம் வரும் போது சுற்றத்தவர் நண்பர்கள் தங்கள் செலவில் தங்கள் முயற்சியாற் பூரண கும்பம் வைத்துப் பூமாலை சூட்டுவர். தேர்தற் கோலத்தில் இவரும அபேட்சகர்களுக்கோ வாக்காளர்களை வலிந்திழுத்து பூரண கும்பம் அமைத்துப் பூமாலை கையிற் கொடுத்தால் அவர்கள் அம் மாலைகளைச் சூட்டிவிடும் ஒரு சிறு சிரமத்தோடு காரியம் பார்த்துவிடுவர்.

இந்த நிலைமை எல்லா அபேட்சகர்களுக்கும ஒப்ப முடிந்ததாகையால அடுத்த தேர்தலில் ஓர் மாற்றம் செய்வதுசிதம்.

அபேட்சகர்கள் இல்லங்களுக்கு வாக்காளர்கள் ஊர்வலமாகச் சென்று ஆங்கு பூமாலைகளைச்சூட்டிவிடலாம். அபேட்சகர்களும் பூமாலைகளுக்குக் கழுத்தைக் கொடுக்க வேண்டியதில்லை. மூச்சுத் திணறும் வில்லங்கமும் எழவேண்டியதில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞு வைகாசி மூ கச உ செவ்வாய்க்கிழமை


## தேர்தல் விரோதம்

அபேட்சகர்கள் யாரோ, அடி பிடிப்படுபவர்கள் யாரோ! கட்சி கட்டுவது என்றால் கடுங் கோபங் கொள்ள வேண்டிய தவசியமா? பஞ்சும் நெருப்பும் போன்று எதிர்க் கட்சியினர் ஒருவரை ஒருவர் சந்திக்காது விட்டாலன்றிப் பெருந் தீபற்றிவிடும்போல இருக்கின்றது.

கட்சித் தேர்தலில் இவ்வாறான நிலைமை ஏற்படுவது சகசம் என்று மனச் சமாதானம் செய்துவிட்டாற் போதாது. ஒவ்வொரு கிராமமும், இல்லை ஒவ்வொரு குடும்பமும் கட்சியென்னும் வாளினால் இரண்டுபடுத்தப்பட்டிருந்த போதிலும் தகாதவகையிலே தடியடி முறையிலே ஈடுபட்டு வசையும் கைவரிசையும் உபயோகிக்கவேண்டியதின்றியமையாததா?

தேர்தல் நிருவாகம் திருத்தியமைக்கப்பட வேண்டும். இந்திய நாட்டிலே அண்மையில் நடந்த மாபெருந் தேர்தலிலே, போக்குவரத்து வசதிகள் வாக்காளர்களுக்கு அளிக்கப்படுவதைச் சட்டமூலமாகத் தடுத்தமையாலும் கை விரலிலே அடையாள மை பூசிக் கள்ளத்தனமாகத் திரும்பவும் வாக்கு அளிக்கப் போகவிடாது தடுத்தமையாலும் கலகங்கள் ஒருவாறு ஒழிக்கப்பட்டன. தேர்தற் பிரசாரத்தைச் சிறந்த வகையிற் செய்யப் போதிய வழியிருந்தும் எதிர்க்கட்சியினரை இகழ்வதாலும் சீற்றம் உண்டாக்கும நோக்கத்துடன் ஏளனமான உரை நடையிலே துண்டுப்பத்திரங்கள் வெளியிடுவதாலும கண்டவுடன் கனல் எழும்பும் தன்மையில் கட்சியினர்கள் காணப்படுகின்றனர்! தீவிரமான அபிமான வேளையிலே ஒரு சிறு சம்பவமும் பெரியதொரு கலகத்தை விளைவித்து விடக்கூடும். வெற்றிக்காகத் தமிழ் மரபுக்கு மாறான வகையில் எக்கட்சியினரும் நடந்துகொள்வது ஒரு கட்சியை அல்லது ஒரு சிலரை மாத்திரம் பாதிக்குமென்று நினைக்க வொண்ணாது. தமிழ்ச் சமூகத்தையே தாக்கிவிடும்.

இன்னும் ஐந்து தேர்தல்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டில் நடைபெற விருக்கின்றன. கட்சி அபிமானம் ஆவேசமாக மாறிக்கொண்டு வருகின்றதை நோக்குமிடத்து அபேட்சகர்கள் ஆதரவாளர்களைத் தக்க முறையிலே கட்டுப்படுத்தி மனித ஒழுக்க முறைமையைத் தழுவி நடந்துகொள்வதற்கான கட்டளையிடல் வேண்டுமென்றும், ஆதரவாளர்கள் தங்கள் அபிமானத்தை நேரான நெறியிலே வளர விட்டு, தமிழ் நாட்டு மானத்தைக் காப்பதற்குரிய பாதுகாவலாளர்கள் என்ற விதத்தில் நடந்து வரவேண்டுமென்றும் வாக்காளர்கள் கட்சிக் கலவரங்களிற் கலந்துகொள்ளாது தங்கள் வாக்குகளைத் தம் மனச்சான்றுக்கமைய அளித்துவிட வேண்டுமென்றும் நன்மொழிபகருகின்றோம்.

வாக்குரிமை பெறுவதைப் பெரும்பேறாகக் கருதும் நாம் அந்தப் பயனை அடையும்பொழுது நீராடச் சென்று சேறுபூசுவது தமிழ் மதி வளத்துக்குப் பொருந்தாது. வாக்குரிமைக்காகச் சத்தியாக்கிரகமும் செய்கின்ற இக்காலத்தில் அவ்வுரிமையைப் பெற்றவர்கள் செவ்வனே நடந்துகொள்ளாது ஒழுங்கீன முறையிலே உணர்ச்சியை எழுப்பிப் பொல்லாக்கலவரத்தையுண்டுபண்ணிவிடுவது எம் மூதாதையரின் பெருக்கும் புகழுக்கும் இழுக்காகும் அன்றோ.

எனவே வன்மொழி, புன்செயல் ஆதியாம் இழிதொழிலை அகற்ற அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் வாக்காளர்களும் முன்வந்து தமிழ்ப் பண்பைப் பாதுகாப்பார்களாக.

---

### பஞ்ச நிவாரணத்துக்கு மழை

அநேக காலத்துக் காலமழை பெய்யாமையால் ருயலசீமாவில் பெரும் பஞ்சமுண்டாகி மக்கள் வருந்துகின்றனர். இந்த வருத்தத்தை நீக்குமாறு இறைவன் திருவருள் வழி அங்கே பெரும் மழைபெய்திருக்கின்றதென அறிகிறோம்.

---

உ
இந்துசாதன இயக்கர்:

### சென்னை ருயல சீமா பஞ்ச நிவாரண நிதி

| | ரூ. ச. |
|---|---|
| முன் வரவு | 53 00 |
| M. E. காதன் சாவகச்சேரி | 20 00 |
| மொத்தம் | 73 00 |

உதவுவோர் விரைந்து உதவுதல் வேண்டப்படும். இந்துசாதனக் காரியாலய அதிபருக் கனுப்புக.

---

# சங்கநாளில் ஓங்கிய வழக்கம்

## காலத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற மணம்

சங்கத்தார்காலத்துப் பாடல்கள் கூறும் காதல் மணத்தின் சிறப்புக்களைப் போற்றிப் பேசும் தற்கால மாணவர்களும் இளைஞர்களும தற்காலம் நடைபெறும் முறைகளை ஆராய்வதில்லை. தற்காலப் பண்பாட்டில் சங்கத்தார் காலத்துக் காதல் முறை ஏற்குமா? அது வெற்றியும் இன்ப வாழ்வும் தருமா என்று ஆராய்வதில்லை. சங்கத்தார் காலத்துக்குப் பிறகு நாட்டில் நடந்துள்ள மாறுதல்களை அவர்கள் உணருவதில்லை. சங்க நூல்களைப் படித்த மாத்திரத்தில அதில் காணும் பண்பாட்டில் மிகவும் ஈடுபட்டு அதனை இக்காலத்தில் உட்புகுத்தவேண்டுமென்று விருப்பம கொள்ளுகிறார்கள். அம்முயற்சிகளைத் தற்காலத்திற்கு ஏற்றபடி மாற்றிக்கொள்வதைப் பற்றியும் அவர்கள் நினைப்பதில்லை. இம்முறைகளைத் தழுவினால் எவ்விதமான விளைவு ஏற்படும் என்றும் கூட எண்ணுவதில்லை.

மேற்கு நாடுகளில் காதல் மணம் நடைபெறுகிறது. இங்கே ஏன் நடக்காது என்று எண்ணுகிறார்கள். மேற்கு நாட்டுக் காதல் மணத்திற்கும் சங்க காலத்துக்காதலுக்கும் பேதம்

திரு. C. M. இராமச்சந்திரன்செட்டியார்

உண்டு. அதனைத் தீர ஆராயாது ஒப்புவமை கொண்டு நோக்குதல் சரியன்று. மேலும் இளைஞர் ஆர்வம பேச்சளவிலேயே நிற்கிறது என்பதும அறிய வேண்டும.

### வடநாட்டு ஒப்புமை

மற்றும், சங்கத்தார் பண்பாடுகளைப்பற்றிப் பேசும்போதெல்லாம் இளைஞர்கள் அவைகளுடைய சிறப்புக்களை எடுத்துக் காட்டுவதற்காக வடநாட்டுக் கொள்கைகளை ஒத்திட்டுச் சொல்வது வழக்கமாகி விட்டது. அவ்விதச் சர்ச்சை திருமணத்திற்கும் கூறப்படுகிறது. தமிழர்களிலே காதலும் கற்புமே இருந்தன. பிறருடைய தூண்டுதலோ தோதலோ வேறு வழக்கமோ இருக்கவில்லை. ஆனால் வடநாட்டிலே அவ்வாறல்ல. மணங்கள் எட்டு வகைப்பட்டன. காதல், களவும் அன்றி தேவம், ஆரிடம் அரக்கம் பைசாசம் முதலிய பலவகைளும் இருந்தன. இவைகளின் செயலகளைக் கேட்ட மாத்திரத்தில் அறிவுள்ளவரும் இவைகளை மணத்தில் சேர்த்துப் பேசமாட்டார். என்றாலும் அவைகளை ஏற்றுக் கொள்ளத்தக்க மணங்களாக வடமொழி அறநூல்கள் கூறுகிறபடியால், அந்நாட்டு வழக்கங்கள மிகத் தாழ்ந்தவை என்று கூறவேண்டும். அன்பு சிறிதும் இல்லாமலும் ஒப்புதல் இல்லாமலும் பலவந்தமாகப் புணர்தல் நாகரிகத்திற்கு ஏற்குமா? அப்படி இருந்தும் இவைகள் மணத்தின பகுதிகளாகக் கூறப்பட்டுள்ளதைப் பகுத்தறிவுள்ள உலகம் நிந்திக்கும் அல்லவா என்று வாதிக்கத் தொடங்குவர். இந்தக் காரணங்களினால் வடநாட்டுப் பழக்கங்களை வெறுத்துக் காதல் மணத்தைச் சிறப்பித்துப் பேசுவர்.

### எட்டுவகை மணம்

இக் குற்றச்சாட்டில் அடிப்படையான கொள்கை சரியாகத் தோன்றின போதிலும், குற்றம் சரியாக அறியப்படவில்லை எனல் வேண்டும். வடநாட்டு நூல்களில் மணங்கள் எட்டு வகையினவாகக் கூறியிருந்த போதிலும் அவைகள் எல்லாம் எக்காலத்திலும் எல்லா மக்களிடத்திலும் நிகழ்ந்தன என்றாவது அவைகள் நாகரிக மக்களுக்கு ஏற்புடைத்தானவை என்றாவது கூறப்படவில்லை. பல வகுப்பார்களிலும் பல காலங்களிலும் நடந்துவந்த மணங்களின் தன்மைகளை அட்டவணையாக நூல்கள் கூறின. அதிலிருந்து அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டன என்று கூறமுடியாது. அக் கூற்றுகளை இலக்கண வரலாற்றுக்குத்தான் கொள்ள வேண்டும். ஆகவே அந்த வரலாற்றுப் பகுதியை வைத்துக்கொண்டு காதல் மணத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுவது ஒப்பத்தக்கதல்ல. ஒரு பண்பு அல்லது கொள்கையினுடைய சிறப்பை எடுத்துக் காட்டுவதற்கு அதன தன்மையிலிருந்து தோற்றுவிக்கும் சிறப்பே தகுதியானது. ஒப்புவமையால் எடுத்துக் காட்டுவது இரண்டாந்தரமானது என்று அறிய வேண்டும்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

### ருயல் சீமாவில் கருணை மழை பொழிந்தது

நெடு நாட்களாக மழையின்மை காரணமாக வாண்டிருந்த ருயல்சீமாவில் சென்ற வெள்ளிக்கிழமை ஓர் பெரும கருணை மழை பொழிந்தது. இங்கு கால்நடைகளும், மனிதர்களும் தண்ணீர் வசதி இல்லாது மிகவும் வருத்தப்பட்டார்கள் பலகூவம் ஆற்றிலும் பக்கிங்காம் கால்வாயிலும் உள்ள தண்ணீர் மட்டம் மிகவும் குறைந்திருந்தது. ஆனால் சென்ற வெள்ளிக்கிழமை 24 மணிநேரம் விடாது பெய்த மழை காரணமாக இங்கு இப்பொழுது போதியளவு தண்ணீர் வசதி இருக்கின்றது. நேணல் என்னுமிடத்தில் 7'5" மழை பெய்தது.

---

### கண்ணுடி மூலம் செயற்கை மழை

திரு. C. மில்லர் என்பவர் அவுஸ்திரேலியாவில் உள்ள வறட்சியைப் போக்கக் கண்ணுடி மூலம் செயற்கைமழை உண்டாக்கத் திட்டமிட்டிருக்கிறார். இவர் ஒன்று 2 அடி 6 அங்குல விட்டமும மற்றது 2 அடி 8 அங்குல விட்டமும் உள்ள இரு கண்ணுடிகளை டாவின் நதியின் மத்தியில் ஸ்தாபித்தார். சூரிய வெளிச்சத்தை இக்கண்ணுடி மூலம் பிரதிவிம்பிச் செய்து பரமாணு மண்டலத்தை எதிரச் செய்து மழை உண்டாக்கலாம் என்றும் இந்த விதமாகத்தான புதுவேல்சில் செயற்கை மழை பெய்வித்தார் என்றும் கூறுகிறார்.

---

### இராமகிருஷ்ணமடம் கதிர்காமம்

கதிர்காமத்தில் இராமகிருஷ்ண மடமொன்று அமைப்பதற்கு 8-6-52 ஞாயிற்றுக்கிழமை காலை 8-40 க்கும் 9-40 க்கும் இடையில் வரும் சுப முகூர்த்தத்தில் அத்திவாரக்கல் இடப்பெறுமென் றறியவருகிறது.

---

**சாவகச்சேரி — பருத்தித்துறை**

**தமிழ்க் காங்கிரஸ் வெற்றி**

திரு. வே. குமாரசாமி
திரு. தா. இராமலிங்கம்

---

### செப்புத் தங்கம்

சுந்தரம், கிருே என்னும் இருவர் மூவாயிரம் ரூபாவுக்கு தங்கமலாம் கொடுத்த செப்பு நாணயங்களைத் தங்கப்பவுணென்று விற்றார்களென மாத்தளைக் கோட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றனர். செம்பு தங்கமாதல் கவனிக்க வேண்டியது.

---

### மதியீனமான மண ஒழுங்கு

இந்தியாவிலே கோண்பூறக் கணிமையிலுள்ள கைசாருக் என்னுமிடத்தில் ஒரு பதனுறு ஆண்டினளாய இளம் மாதுக்கு மணவினை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. மணப்பந்தருள் மணமகன் வந்து மங்கலப் பொருள்களைக் கொடுத்தார். மணமகனைக் கண்ணுற்றுள் மாது. ஆண்டு ஐம்பதான அலங்கோல உருவம், அழுதாள் எல்லையில்லாமல். கலியாணமுருகாது சதியென்றார் தந்தையார். சபையிலுள்ளோர் மாதமீது இரங்கி மணவினையை நீக்கினர்.

---

### இலங்கை இந்தியரும் இந்திய இலங்கை மாணவரும்

இலங்கை இந்தியருக்கு வாக்குரிமைகொடாததால், தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை எடுத்துக்காட்டி இன்னும் எத்தனை வித விளைவுகள் உண்டாகும் என்பதை விரித்து விளக்கிக் கல்கத்தாவிலுள்ள இலங்கை மாணவர், இலங்கை இந்தியருக்கு வாக்குரிமை கொடுக்கும் விஷயத்தில் இலங்கைத் தேசாதிபதியை ஈடுபடும்படி ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்க நாளில் - - - ஓங்கிய வழக்கம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

**காதல் மணம்**

மனிதன் காடுகளிலும் மேடுகளிலும் புலன்களிலும் வசித்த காலங்களில் இயற்கைக் காதல் எளிது. நகரங்களில் பெருவாரியாக வசிக்கத்தொடங்கின போது காதல்மணம் கடினமாகிவிடும், சங்க நூல்களிலும் காதல் புணர்ச்சியானது குறிஞ்சி நாட்டிற்குக் கூறப்பட்டது. மருதநிலத்திற்குக் கூறப்படவில்லை. குறிஞ்சி வாழ்க்கை குறையததொடங்கி மிருதால் நகர வாழ்க்கை பெருகிவிட்ட காலங்களில் சிலப்பதிகாரத்தில் காணுகிறபடி பெற்றோர் இணைத்து வைக்கும் மணமே மிகுந்துவிட்டது. இயற்கையில் எளிய வகையில் குடிகள் வாழ்ந்த காலத்தில் மக்கள் யாதொரு கள்ளம் கபடுஇல்லாமல் ஒருவரை ஒருவர் அன்போடு சந்தித்து உண்மைக் காதல்கொள்ள முடியும். அப்படியின்றி நகரங்கள் ஏற்பட்டு வாணிபம் சிறந்த நாட்டில் கள்ளமும் கபடம் மிகுதியாகி விட்டதால் உலக அனுபவம் அற்ற இளைஞர்கள் காதல் வழியில் இறங்க வழி ஏற்படாது. இதனை நன்கு அறிந்த தொல்காப்பியனார்,

> "பொய்யும் வழுவும்
> தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் காரணம் என்ப"

எனரூர். ஆகவே உலக சரித்திரத்தில் மாறுதல் அடையப் பெற்றோர்கள் இளைஞர்களுக்கு ஏற்ற உதவி தருபவர்களாக இருக்கத் தலைப்பட்டனர். இது தமிழ் நாட்டிலும் ஏற்பட்டதே ஆகும்.

**இணைத்த மணம்**

மேலும் சங்க காலத்தில் காதல் மணம்மட்டும் இருந்தது என்று சொல்ல இடம் இல்லை. பெற்றோர் இணைத்த மணம் மட்டும் இருந்த தென்றும் சொல்ல இடமில்லை. இந்த இரண்டும் கலந்து ஒரு விபரீதமான சமூகப்பழக்கமும் ஏற்பட்டுவிட்டது. அதன் உண்மையைச் சிலப்பதிகாரமும் சில அகப்பாடல்களும் காட்டுகின்றன.

குறிஞ்சி நாட்டு நன் மக்கள் காதல் வழிப்பட்டுத் திருமணம் நடத்தினார்கள். அரசர்கள், வாணிகர்கள்; வேளாளர்கள், முதலான நகர மாந்தர்களோ காதல் வழிச் செல்லவில்லை. பெற்றோர்கள நற்குடி மக்களைத் தெரிந்தெடுத்து இணைத்து வைத்தார்கள். கோவலன் தந்தையும் கண்ணகி தந்தையும் இரு குடிகளின் பெருந்தன்மைகளையே ஆராய்ந்து திருமணம் புரிந்துவைக்க இசைந்தார்கள். புனிதவதியார் தகப்பனார் தனதத்தனாரும் பரமதத்தன் தகப்பனார் நீதிபதியாரும் மணம் பேசித் தத்தம் மக்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். திலகவதியார் தகப்பனார் புகழனாரும், கலிப்பகையார் தகப்பனாரும் திருமணத்திற்குச் சம்மதித்தார்கள். சுந்தரமூர்த்திகளுடைய தடைப்பட்ட திருமணமும் இவ்வாறாகவே நடைபெற்றது. இவ்வித வரலாறுகள் பல எடுத்துக் கூறலாம்.

**எது பொருந்தும்?**

இவைகள் காதலினால் ஏற்பட்டவையா? சங்ககாலத்து அரசர்களின் திருமணங்கள் இவ்வாறே தூது செய்பவர்களால் ஏற்பட்டவை. ஆனால் காதல் மணமான பண்டைய எளிய நிலைப் பொருத்தமும் மறைந்து போகவில்லை. அது காம மணமாக மாறிவிட்டது. பரத்தையர் தொடர்பினால் உண்டாகிவிட்டது. நாட்டுவழக்கத்தை ஒட்டிப் பெற்றோர்களால் இணைக்கப்பட்ட ஒரு ஆடவன் தன் இல்லத்தில் மகிழ்ச்சிக் குறைவாகவோ அல்லது வெளிச் செல்லும் போது வீசப்பட்ட வலையில் சிக்கினதாலோ பரத்தையர் காதலிலே விழுந்து விடுகிறான். இது பண்டைய காதல் மணம் பின்னால் கபடம் ஏற்பட்ட போது மாறின காம மணம் ஆகிவிட்டது. இதன் விளைவு இல்லறத்தாரைக் கெட்ட வழியில் சேர்த்து அமிழ்த்தி விட்டது. கோவலன் தொடக்கத்தில் நல்லறமாகிய இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டும் பரத்தையாகிய மாதவி வலையில் விழுந்து காதல்கொண்டு காமபரவசமாகி விடுகிறான். அகத்துறைகளிலும் கற்பியலில் வாழும் தலைமகன் பரத்தையர் வலையில் விழுவதைப் படிக்கின்றோம். ஆகவே சங்கத்தார் காலத்திலும் காதல் மணம் கெட்டுப்போய்த் தாழ்ந்தநிலைக்குச் சேர்ந்து விட்டது எனலாம். ஆகவேதான் பெரியார்கள் காரணம் என்ற வைதிக மணத்தை நிறுவத் தொடங்கினார்கள். இவைகளை ஆராயும் போது காலத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்றபடி மண விதிகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் எனறு ஏற்படவில்லையா?

மேல் நாடுகளில் காதல் மணமே சிறந்து விளங்குகிறது என்று நாம் எண்ணிக் கொள்ளுகிறோம். பாடசாலை மாணவ மாணவிகளில் இவ்விதமான மணங்கள் நேரலாம். பாமர மக்களிலும் நேரிடலாம். ஆனால் பெரிய குடும்பங்களிலும் பிரபுக்களிலும் இவ்வித மணங்கள் நிறைவேறுகின்றனவா என்று கேட்போம். அரச வம்சங்களில் இவ்வித மணம் நேருவதே கிடையாது. தப்பித் தவறி நேரிட்டால் எட்வார்டு அடைந்த கதிதான் அடைய நேரிடும். இரத்தத்தின் தூய்மை கெட்டுப் போகாதபடி பெற்றோர்களே மணமக்களை இணைத்து விடுவார்கள். பொதுவாகப் பார்க்கையில் அங்கேயும் பெற்றோர்கள் உறவினர்கள் சம்மதியில்லாமல் எந்தமணமும் நிறைவேறுவதில்லை. மேற்கு நாட்டு வழக்கத்தைக் கைக்கொள்ள எண்ணிவரும் கிறிஸ்தவ வகுப்புகளிலும் திருமணம் நடத்துவதற்கு முன்பு தேவாலயத்தில் அது நடைபெறப் போகிறது என்று ஒரு கெடுவு கொடுத்து விளம்பரப்படுத்த வேண்டும். அக்கெடுவுக்குள் உறவினர் தடை கூறலாம், இல்லாவிடில் திருமணம் நடைபெறும், ஏன் இந்த நியந்தனை இருக்கிறதோ?

மேலும் சமாதான காலங்களைக் காட்டிலும் போர்க் காலங்களில் காதல் மணங்கள் மேற்கே மிகுதி. அதற்கு ஏற்றாற்போலவே திருமண ரத்துக்களும் மிகுதியாகின்றன. சாதாரண காலத்திலோ அவை குறைவு என்று சொல்லமுடியாது. ஒரு ஆடவனும் ஒரு மங்கையும் மனம் ஒத்துச் செய்து கொண்ட மணம் ஏன் விலக்கப்படவேண்டும், ஆகவே காதலில் எல்லாப் பண்புகளும் சரியாக இல்லை என்றல்லலோ கூறவேண்டும். ஆனால் பெற்றோர்கள் ஆராய்ந்து இணைத்து வைத்த திருமணங்களில் இத்தனை திருமண ரத்துக்கள் இல்லை என்று திட்டமாகக் கூறலாம், திருமணத்து இல்லாத இந்திய மணங்களையும் ரத்து உள்ள மேல் நாட்டு மணங்களையும் சற்று ஒத்திட்டுப் பார்த்து இன்ப வாழ்க்கை எங்கே மிகுதியாக இருக்கிறது என்று காணுங்கள். பெற்றோர் செய்து வைக்கும் திருமணங்களிலேதான் இன்பம் மிகுதி என்று செயல் முறையில் காணலாம். காதல் முறையில் காதலின் அருமை பழகியவுடன் மறைந்து போகும்.

(—சோலை)

பிறகு என்ன மாறுதல்கள் தோன்றும்போது அப் பந்தத்தை விட்டுவிடலாமா என்று தோன்றும் பெற்றோர்கள் செய்து வைத்ததில் பண்புகளை ஆராய்ந்தே செய்திருப்பதால் எளிதில் அக் கட்டுப் பிரிவினை ஆகஇயலாது. காதல் மணம் இருவருடைய ஏற்பாடு, பெற்றோர் இணைப்பு நால்வருடைய ஏற்பாடு. ஆகவே இது அதைவிட உறுதியானதல்லவா?

ஆனால் ஒரு கேள்வி கேட்கலாம் பெற்றோர் இணைக்கும் திருமணம் துயரம் தருவதில்லையா? என்பதே. எத்தனையோ துன்பம் தரலாம். எத்தனையோ கதைகள் கேட்டிருக்கிறோம், எத்தனையோ நவீனங்களும் எழுதியும் இருக்கிறார்கள். ஆனால் அவைகளில் எல்லாம் பெற்றோர்கள் சரியான வழிகளைத்தழுவாததினால் தான் இத்தனை சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறவேண்டும். சில பகுதிகளில்தான் இக் கொடுமை மிகுதி. பணத்தாசை பொருளாசை, அதிகார ஆசை இவைகளைப் பயணமாக வைத்து முடிக்கிற திருமணங்களே இத்தகவலைகளுக்கு இடமாகும் என்க. இவைகளை விலக்கித் தூய உள்ளத்தோடு செயல்களைச் செய்தால் இத் துன்பங்கள் விளையமாட்டா.

காதல் காதல் என்று மேடையிலும் நூல்களிலும் முறையிடும் இளைஞர்களிலேயே வைன்றிப்பார்த்தால் பெற்றோர்களின் புத்திமதிக்கும் புரோகிதரின் சோதிடத்திற்கும் ஆனாவது நேரில் காண்கிறோம். உண்மைக் காதல் மணம் அன்னாரிடத்தில் செயல் முறையில் காண்பதே கிடையாது.

ஆகவே, நாட்டில் மக்களின் இனிய வாழ்க்கையை உத்தேசித்து நடத்தும் திருமண இணைப்பு எவ்வாறு இருக்கவேண்டும்? தற்கால நாட்டு அமைதி கூறுகிறதென்றால ஒத்த வயதும் பண்புகளும் நன்றாக ஆராய்ந்து பெற்றோர், உறவினர், தெரிந்தெடுத்து பிறகு மணமக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து ஆறுதல் அடைந்து ஒத்துக்கொண்டால் அவர்களுக்குள் திருமணம் நடக்கலாம். அந்த இணைப்பு வெறும் ஒப்பந்த இணைப்பாக இராமல் வாழ்க்கையை எப்போதும் கட்டுப்படுத்திச் சீராக்கும் திருமணம் ஆக இருத்தலே சிறப்பு. அதற்காகப் பெரியார்கள் முன்பு தெய்வ சாட்சியாகத் திருமணம் [illegible] வில்லையா?

---

## தேர்தல் வெற்றி விபரம்

(முதற் பக்கத் தொடர்ச்சி)

**சுயேச்சையாளர்**

மட்டக்களப்பு:
திரு R. B. கதிர்காமர்
பட்டிருப்பு:
திரு. S. M. இராசமாணிக்கம்
மூதூர்:
திரு, E, M. A. முகமது
மன்னார்:
திரு. C. சிற்றம்பலம்
கல்முனை:
திரு. M. A. பஜீது.
கொழும்பு மத்தி:
சேர். A. R. ரஜிக்.

| கட்சி நிலைமை | (இன்று) |
|---|---|
| ஐ. தே. க. | 22 |
| தமிழ்க்காங்கிரஸ் | 2 |
| சுதந்திரக் கட்சி | 5 |
| பொதுவுடைமை | 1 |
| தமிழரசு | 1 |
| தனிப்பட்டோர் | 6 |
| | 37 |

---

# செந்தமிழ் நாவலர் சேக்கிழார் நாயனார்

## திருத்தொண்டர் புராணம் செய்த சிவனடியார்

தொண்டை மண்டலத்திலே குன்றத்தூரிலே வேளாண் குலத்திலே பரமசிவனது திருவருளினால் சைவசமயம் ஓங்கி விளங்கவும், தமிழ்நாடு உய்யவும் அருண்மொழித் தேவரெனும் சேக்கிழார் நாயனார் திருவவதாரஞ் செய்தார். அன்னாருடைய கல்வியறிவு ஒழுக்கங்களின் மேம்பாட்டை யறிந்த அநபாய சோழமகாராசா அவரைத் தமது முதன் மந்திரியாக்கி அவருக்கு உத்தம சோழப் பல்லவரெனும் பட்டமுஞ் சூட்டினர். நாயனார் தமது உத்தியோகக் கடமைகளை அரசனுங் குடிகளும் மெச்சுமாறு நிறைவேற்றிக் கொண்டு சிவபத்தியுடையராய் வாழுநாளில சைவசமயிகளிற் சிலரும் அரசனும் சைவநூல்களைக் கல்லாது சமணர்களுடைய காப்பியமாகிய சிவகசிந்தாமணியை மெய் நூலெனக் கருதிக் கற்று வந்தனர். அது கண்ட சேக்கிழார் நாயனார் அரசனை நோக்கி 'வீடுபேற்றை அருள வல்ல சைவநூல்களைக் கல்லாது சைவத்தை நிந்திக்கும் புறச்சமயத்தவரது நூலாகிய சிவகசிந்தாமணியை மெய்யெனக்கற்று உமது வாணாளை வீணாக்குவது தகுதியன்று' எனக் கண்டித்தார்.

**சிவசரிதம் யாத்தமை**

அரசன் இம்மை, மறுமை, வீடு மூன்றும் அளிக்கவல்ல சிவசரித்திரம் யாதென்று வினவ, சேக்கிழார் நாயனார், திருவாரூரிலே எழுந்தருளிய வன்மீகநாதர் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன" என்று அடியெடுத்துக் கொடுக்கசுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத் தொகைப் பதிகம் பாடியருளினர். அதனை வகுத்து நம்பியாண்டார் நம்பி ஒரு திருவந்தாதி செய்தருளினர். அதனைத் திருமுறைகண்ட இராஜராஜ அபயகுல சேகர சோழ மகாராசா முதலிய பெரியோர்கள் இனிது பாராட்டினர்கள்' என்று சொல்லி அதன் பொருளை விரித்துரைத்தார். அரசன் இச்சரித்திரத்தை யாவரும் தெளிவாய் விளங்கும் பொருட்டுப் பெருங்காப்பியமாக விரித்துச் செய்க என்று ஏராத்மான திரவியத்தைக் கொடுளைதான். சேக்கிழார் நாயனார் கனகசபேசரைத் தரிசித்து மனங்கசிந்துருகி நின்று "அடியேன் தேவரீருடைய திருத்தொண்டர்களது அடிமைத் திறத்தைப் பெருங் காப்பியமாக விரித்துப் பாடுவதற்கு அடியெடுத்துத் தந்தருள வேண்டு"மென்று பிரார்த்திக்க சபாநாயகரது திருவருளினால "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன" என்று ஓர் அசரீரி வாக்கு அடியார் யாவருங் கேட்கும்படி எழுந்தது.
"அடையலார்புர நீறெழுத்திரு நகைசெய்தன் றொரு மூவரைங்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

செல்வச்சந்நிதி
திரு. ச. முருகேசு
எழுதுவது

---

## நீராலே திருவிளக்கு ஏற்றிய அன்பர்

1-ம் பக்கத்தொடர்ச்சி

மகாராசா வேண்டிய ஒழுங்கு செய்தார்.

**யாவரும் எம் கணம்'**

இவை இவ்வாறாக, பங்குனி மாசமகோற்சவகாலத்தில் ஒருநாள் சுவாமி திருமணவிக்கு எழுந்தருளியபொழுது திருவாரூரிலுள்ளார் யாவரும் ஒருங்கு சேவித்துச் சென்றனர். நாயனாரும் உடன் சென்று வீட்டுக்குத் திரும்பியபொழுது எல்லாச்சாதியாரும் உடன் சென்றபடியால் தமக்குச் சிவார்ச்சனை செய்ய முடியாது தீட்டுண்டாயிற்றென்று கூறிக் குளித்தற்குத் தண்ணீர்கொண்டு வரும்படி மனைவியாருக்குச்சொன்னார். மனைவியார் வருமுன் நாயனார் சிறிதுறங்கியபொழுது சிவபெருமான் சொப்பனத்திலே தோன்றித் திருவாரூரிலுள்ளவார் யாவரும் எம்முடைய கணங்கள் அதை நீ காண்பாய் என்றுகூறி மறைந்தருளினார். நாயனார் விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றமென்றுணர்ந்து எழுந்தபடியே சென்று சிவார்ச்சனை செய்தார்.

மறுநாள் வழக்கப்படி திருவாரூருக்குச் சென்றபொழுது அங்குள்ளவர்களெல்லாம் சிவசாரூப்பிய முள்ளவர்களாயிருந்ததைக் கண்டு நிலத்திலே விழுந்து வணங்கி இன்புற்றார்.

> தெய்வப் பெருமான்
> திருவாரூப் பிறந்து வாழ்வார்
> எல்லாரும்
> மைவைத் தனைய மணிகண்டர்
> வடிவே யாகிப்
> பெருஞ்சோதியால்
> மொய்வைக் தமர்ந்த
> மேனியராம் பரிசு
> கண்டு முடிகுவித்த
> கைவைத் தஞ்சி அவனிமிசை
> விழுந்து பணிந்து
> களிசிறந்தார்.

பின்னர் அவர்கள் முன்போலானவைதக் கண்டு தம்மைப் பொறுத்தருளுமாறு சுவாமியை வேண்டினார். இங்ஙனம் தொண்டு செய்வதோடு சிவனடியாருக்கு வேண்டியன வெல்லாம் செய்து வாழ்ந்து திருவாரூர்ப் பெருமானுடைய திருவடிநீழலையடைந்தார்.

> இன்ன வகையால் திருப்பணிகள்
> எல்லா உலகுந்
> தொழச் செய்து
> நன்மை பெருகும் நமிநந்தி
> அடிகள் நயமார் திருவீதிச்
> சென்னி மதியும் திருநதியும்
> அலைய வருவார் திருவாரூர்
> மன்னர் பாத நீழல்மிசை
> வளர்பொற்சோதி மன்னினார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

